தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)

*******

ஆணை எண். 140/2019
நாள். 03.12.2021

1) திரு. K. கணபதிபாண்டியன்,
கயத்தார் வட்டம்.

2) திரு.மா.முருகன்,
லிங்கம்பட்டி. – முறையீட்டு மனுதாரர்கள்

ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி. – எதிர்மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் வட்டம், வெள்ளாளங்கோட்டை, கீழத்தெரு, 1/14 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. K. கணபதிபாண்டியன் என்பவரது 06.09.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.09.2019 அன்று பெறப்பட்டு, 140/2019 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், லிங்கம்பட்டி, அண்ணா நகர், கதவு எண்.6/779 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.மா.முருகன் என்பவரது 03.03.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.03.2020 அன்று பெறப்பட்டு, 112/2021 என்ற முறையீட்டு எண்ணாக பதிவு செய்யப்பட்டது. இரண்டு மனுக்களும் ஒரே பொருளாக இருப்பதால் இரண்டு மனுக்களையும் ஒன்றாக இணைத்து அவர்கள் மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் வட்டம், வெள்ளாளங்கோட்டை, கீழத்தெரு, 1/14 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. K. கணபதிபாண்டியன் என்பவர் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகராட்சியில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவர் தினசரி சந்தைக்கு கொண்டு வரும் பொருட்களுக்கு நுழைவு கட்டணம் வசூலிப்பதில் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியது குறித்து திரு. K. கணபதிபாண்டியன் புகார் அளித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் திரு. K. கணபதிபாண்டியன் அவர்கள் தன் மனுவில் கீழ்க்காணுமாறு புகார் தெரிவித்துள்ளார்:-

"கோவில்பட்டி நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் தினசரிச் சந்தையில் கடை வாடகை நீங்கலாக நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு தினசரிச் சந்தை தோற்றுவிக்கப்பட்ட காலமான 1970 முதல் 2017 – 2018 ம் ஆண்டு வரை நகராட்சியால் ஏலம் விடப்பட்டு, 2017 -2018 ம் ஆண்டில் நுழைவு கட்டண அட்டவணையில் உள்ள 1 முதல் 47 வரையிலான இனங்களுக்கு நுழைவு கட்டண வசூல் உரிமம் மூலம் ரூ.49,18,000/- வருவாய் கிடைத்துள்ளது".

2. "கோவில்பட்டி நகராட்சி தினசரிச் சந்தையில் உள்ள 393 கடைகளுக்கு ரூ.1.30, 1.50, 1.65, 2.00, 2.40, 2.50, 3.00, 3.60 மற்றும் ரூ.7.50 என்ற அடிப்படையில் 1970 முதல் 31.03.1993 வரை நாள் ஒன்றுக்கு வாடகையாக நகராட்சியால் வசூலிக்கப்பட்டு வந்தது. 01.04.1993 முதல் 31.03.2009 வரை மேற்படி கடைகளுக்கு ரூ.2.75, 3.00, 3.75, 5.00, 5.50, 6.00, 7.50, 9.00, 12.00 மற்றும் ரூ.15.00 என்ற அடிப்படையில் நாள் 1-க்கு வாடகையாக நகராட்சியால் வசூலிக்கப்பட்டு வந்தது. 01.04.2009 முதல் 30.09.2017 வரையில் மேற்படி கடைகளுக்கு ரூ.5.00, 10.00, 15.00, 20.00 மற்றும் ரூ.25.00 என நாள் 1-க்கு வாடகையாக நகராட்சியால் வசூல் செய்து வந்த நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி மேற்படி 393 கடைகளுக்கு 01.10.2017 முதல் மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது.

கோவில்பட்டி நகராட்சி தினசரி சந்தை வியாபாரிகள் சங்கத் தலைவர் திரு.என்.முத்துராஜ் என்பவரின் 07.02.2018ம் தேதிய மனுவில் தினசரிச் சந்தையில் உள்ள கடைகளுக்கு மாத வாடகை அதிகமாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளதால் 1 முதல் 47 வரையிலான இனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் முறையினை ரத்து செய்யுமாறு நகராட்சி ஆணையாளருக்கு கோரிக்கை வைத்துள்ளார். கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் 12.02.2018ம் தேதிய ந.க.எண்.9856/2015/அ3 அறிவிப்பில் நகராட்சி தினசரிச் சந்தையில் கடை வாடகை நீங்கலாக நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கான ஏலம் தற்காலிமாக ஒத்தி வைக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

கோவில்பட்டி நகராட்சி ஆணையாளரின் 12.02.2018ம் தேதிய ந.க.எண்.9856/2015/அ3 அறிவிப்பில் நுழைவு கட்டணம் எவ்வகையான இனங்களுக்கு வசூல் செய்யவேண்டும் என்பது குறித்து ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு தினசரி சந்தை வியாபாரிகள் சங்க பொறுப்பாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களைக் கோரியதன் அடிப்படையில் மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில் 1 முதல் 47 வரையிலான நுழைவு கட்டண வசூல் இனத்தில் 40 இனங்களைத் தவிர்த்து 7 இனங்களுக்கு மட்டும் வசூலிக்கலாம் என்று தினசரிச் சந்தை வியாபாரிகள் சங்கத்தினர் தெரிவித்ததை ஏற்று நகராட்சி ஆணையாளர்/தனி அலுவலர் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி முறைகேடாக நீக்கம் செய்துள்ளார்.

மேலும் தினசரிச் சந்தை நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏலம் விட எந்தவிதமான தொடர் நடவடிக்கைகளும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலரால் எடுக்கப்படாத நிலையில் 01.04.2018 முதல் தினசரிச் சந்தை நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் பணியினை நகராட்சி நிர்வாகம் செய்யப்பட உள்ளதாக 28.03.2018ம் தேதிய ந.க.எண்.9856/2014/அ3 அறிவிப்பில் முந்திய குத்தகைதாரருக்கு நகராட்சி ஆணையாளர் /தனி அலுவலரால் அறிவிப்பு கொடுக்கப்பட்டு மேற்படி பொறுப்பினை நகராட்சி நிர்வாகம் எடுத்துக் கொண்டது.

3. மேற்காணும் புகார்களை தெரிவித்த மனுதாரர் திரு.K.கணபதி பாண்டியன் "கடை வாடகை உயர்த்தி நிர்ணயம் செய்தமைக்கான தமிழ்நாட்டில் எந்த ஒரு நகராட்சியும் தினசரிச் சந்தைக்கான நுழைவுக் கட்டண வசூல் உரிமம் ஏலத்தை குத்தகை இனத்திலிருந்து நீக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மேலும் மேற்கண்ட குத்தகை இனத்திற்கு 2018 – 2019 ஆம் ஆண்டு நகராட்சி நிர்வாகத்தால் ஏலம் விட தொடர் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாததால் நகராட்சிக்கு சுமார் ரூ.51,78,813/- வருவாய் இழப்பு ஏற்பட காரணமாக இருந்த அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்து இழப்பை ஈடு செய்யவும். மேற்படி குத்தகை இனத்தை மீண்டும் குத்தகை இனத்தில் சேர்க்க உரிய உத்திரவு பிறப்பிக்குமாறு" கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இந்நேர்வில் முதலாவது மனுதாரர் திரு.K.கணபதி பாண்டியன் தெரிவித்த குற்றச்சாட்டுகளை இரண்டாவது மனுதாரர் திரு.மா.முருகன் 03.03.2020 நாளிட்ட தனது புகார் மனுவில் தெரிவித்து, கீழ்கண்டவாறு கூறியுள்ளார்:-

"கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பசும்பொன் முத்துராமலிங்கதேவர் தினசரிச் சந்தைக்கு கொண்டு வரும் பொருட்களுக்கு சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து நுழைவுக்கட்டணத்தை வசூலித்து அதனை குத்தகைதாரருக்கு செலுத்துவதை கருத்தில் கொள்ளாமல் கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பசும்பொன் முத்துராமலிங்கதேவர் தினசரிச் சந்தையில் உள்ள வியாபாரிகளின் ஆலோசணைகளை கேட்டு (நாள்.23.02.2018) கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் தனது அதிகாரத்தினை தன்னிச்சையாக தவறாக பயன்படுத்தி ஏலம் விடுவதால் வரும் வருமானத்தை கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பசும்பொன் முத்துராமலிங்கதேவர் தினசரிச் சந்தையில் உள்ள வியாபாரிகளுக்கு பயன்பெறும் வகையில் 1 (ஒன்று) முதல் 47 (நாற்பத்தேழு) பொருட்களாக இருந்ததை குறைக்க ந.க.எண்.9856/2015அ3 நாள்.23.02.2018 தேதியிட்ட கடிதத்தில் 1 (ஒன்று) முதல் 7 (ஏழு) குறைத்தும் மீண்டும் 1 (ஒன்று) முதல் 5 (ஐந்து) பொருட்களாக குறைக்கப்பட்டு அதன்பின் ஏலம் நடந்தப்பட்டதால் கோவில்பட்டி நகராட்சிக்கு வருவாய் இழப்பீடு செய்த நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் மீதும் அதற்கு துணை போன நகராட்சி அலுவலர்கள் மீதும் துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டிக்கொள்கிறேன்.

மேற்கண்ட ஏலம் குறித்து மறுஅறிவிப்புகள் மற்றும் ஏலம் விடுவது குறித்த நடவடிக்கைகள் கோவில்பட்டி நகராட்சி நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படாததால் 2018-2019 ஆம் ஆண்டுக்கு ரூ.50.00 லட்சம் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுக்கு ரூ. 50.00 லட்சம் நிதியாண்டில் ஒப்பந்தபுள்ளி கோருதல் சம்மந்தமான விதிகளை முறையாக கடைப்பிடிக்காததால் மற்றும் நடைமுறைகளாலும் கோவில்பட்டி நகராட்சிக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் நிதிஇழப்பீடு ஏற்பட்டுள்ளது.

5. இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை முறையீட்டு மனு எண்.140/ந/2019 நாள்.10.09.2019 மூலம் முறையீட்டு மனுதாரர் திரு.K.கணபதி பாண்டியன் அவர்களை இம்முறை மன்றத்தில் 04.11.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அறிவுறுத்தப்பட்டது. திரு.K.கணபதி பாண்டியன் 04.11.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடந்த விசாரணையில் கலந்து கொண்டு கீழ்க்காணுமாறு தன் வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

“06.09.2019 நாளிட்ட புகார் மனு என்னால் அனுப்பப்பட்டது. கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர், கோவில்பட்டி நகராட்சி பசும்பொன் முத்துராமலிங்க தேவர் வாரச்சந்தை நுழைவு கட்டண வசூல், வசூலிக்கப்பட்டு வந்ததை 2018-2019 ஆண்டிற்கு ஏலம் விடாமல் நகராட்சிக்கு ரூ.51,78,813/- இழப்பு ஏற்பட்டு உள்ளது. அதற்கு முன்பு நான் ரூ.33,33,333/- ஏலம் எடுத்திருந்தேன். மூன்று ஆண்டுகளுக்கான ஏலத்தொகை ஆண்டு ஒன்றுக்கு மேற்கூறிய தொகை கட்ட வேண்டும். 2018-2019த்திற்கு சில இனங்களுக்கு ஏலம் விடப்பட்டது. ஆனால் நுழைவு கட்டண இனத்திற்கு மட்டும் ஏலம் விடப்படவில்லை. இதற்கு ஏலம் விடாமல் நகராட்சியே வசூல் செய்ய போகிறது என்று சொல்லி என்னை அப்புறப்படுத்திவிட்டார்கள். நகராட்சி சில மாதங்கள் வசூல் செய்தது. அதனால் நகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டது. நகராட்சி வசூல் செய்வது தவறு என்று சொல்லி சிலர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடுத்தார்கள். சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆணையின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ரூ.40 லட்சத்திற்கு மேல் ஒப்பந்தம் கோரிய திரு.பால்ராஜிக்கே ஏலம் உறுதி செய்யப்பட்டது. பின்பு ஏலத்தில் கலந்து கொண்டு கிடைக்காமல் போன திரு.ரவீந்தரராஜ் என்பவரிடம் ரூ.10 லட்சம் டெபாசிட் பெற்றுக்கொண்டு திரு.பால்ராஜ் கேட்ட தொகையைவிட உயர்வாக உள்ளது என்று கூறி அவருக்கே உறுதி செய்துவிட்டனர். தற்பொழுது திரு.ரவீந்தரராஜ் வசூல் செய்து வருகிறார். இதனை எதிர்த்து திரு.பால்ராஜ் உயர்நீதிமன்றம் சென்றார். திரு.ரவீந்தராஜ் சார்பாக வேறு சிலரும் வழக்கு தொடுத்துள்ளனர். ஒப்பந்தப்புள்ளி தீர்மானிக்கப்பட்டும் வேறு ஒருவருக்கு வழங்கியது சட்டத்திற்கு புறம்பாகவே நடைபெற்றுள்ளது. விதிகளின்படி செயல்படவில்லை.

திரு.ரவீந்தராஜ் தினசரி மார்கெட்டில் கடை வைத்துள்ளார். கடை வாடகை பாக்கியும் ஒழுங்காக செலுத்துவதில்லை. தற்பொழுது கடை பாக்கி ரூ.6,000/- மாக உள்ளது ஏலம் விடும் பொழுது ரூ.40,000/- பாக்கி இருந்தது. முறையாக ஏலம் நடத்தப்பட வேண்டும். திரு.ரவீந்தராஜ் வியாபாரிகள் சங்க முன்னாள் தலைவர் அவர் 7 இனங்களுக்கு மட்டுமே நுழைவு கட்டணம் வசூல் செய்யப்பட வேண்டும் என நகராட்சி ஆணையரிடம் கோரிக்கை வைத்து ஏழு இனங்களுக்கு மட்டுமே வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு 40 இனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யப்பட்டு வந்தது. ஏலம் நேர்மையாக முறையில் வெளிப்படையாக நடைபெறவேண்டும். இழப்பு ஏற்படுத்திய நகராட்சி ஆணையர் மேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். திரு.அட்சயா என்பவர் ஆணையராக இருந்தார். திரு. ராஜேஸ்வரன் வருவாய் அலுவலராகவும், திரு.மாரியப்பன் வருவாய் உதவியாளராகவும் பணியாற்றினர். தற்பொழுது நகராட்சி பொறியாளர் ஆணையர் பொறுப்பினை மற்றும் தனி அலுவலர் வகித்து வருகிறார். இன்றைய விசாரணையின் போது சில கூடுதல் ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளேன் என்று தெரிவித்தார்”.

6. இதனை தொடர்ந்து இந்நேர்வில் இரண்டாவது மனுதாரர் திரு.மா.முருகன் மற்றும் எதிர் மனுதாரர்கள் ஆன கோவில்பட்டி நகராட்சி ஆணையர் மற்றும் கோவில்பட்டி நகராட்சியின் தற்போதைய வருவாய் அலுவலர் மற்றும் முன்னாள் வருவாய் அலுவலர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 14.09.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் முறைமன்ற நடுவத்தில் 28.09.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

7. இந்நேர்வில் இரண்டாவது மனுதாரரான திரு.மா.முருகன் அவர்கள் 28.09.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்காணுமாறு தனது வாக்குமூலத்தை அளித்தார்:-

“தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகராட்சியில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவர் தினசரிச் சந்தையில் உள்ள கடைகளுக்கு குறைவான வாடகை வசூலிப்பதால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுகிறது. அதே போன்று பொருட்களின் நுழைவுக் கட்டணத்திற்கான ஏலத்திலும் முறைகேடு நடைபெற்றுள்ளது. இந்நேர்வு தொடர்பாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் கையொப்பமிடப்பட்ட எனது எழுத்துபூர்வமான வாக்குமூலத்தை இம்மன்றத்தின் முன் சமர்பிக்கிறேன். இதனையே எனது நேரடி வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திரு. மா. முருகன் அவர்கள் விசாரணையின் போது சமர்ப்பித்த தட்டச்சு செய்யப்பட்ட வாக்குமூலத்தில்:-

“ 2017-2018 ஆம் ஆண்டிற்கு கோவில்பட்டி தினசரிச் சந்தை நுழைவுக்கட்டணம் வசூல் குத்தகை இனத்திற்கு ஏலம் நடைபெற கோவில்பட்டி நகராட்சி நிர்வாகத்தால் ஏல அறிவிப்பு அறிவிக்கப்பட்ட நிலையில் ஏலம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது என்றும் அதற்கான காரணங்கள் ஏதும் தெரிவிக்காத நிலையில் தினசரி சந்தை நுழைவுக்கட்டணம் வசூல் பணியினை கோவில்பட்டி நகராட்சி நிர்வாகம் செய்வதாக அறிவித்து வசூல் ஏதும் செய்யாமல் ஏலம் விட எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காமல் 1970 முதல் குத்தகை விடப்பட்ட தினசரிச் சந்தை நுழைவுக்கட்டண வசூல் ஏலம் விடப்படாதால் கோவில்பட்டி நகராட்சி நிர்வாகத்திற்கு தொடர் நிதி இழப்பு 2018–2019, 2019-2020, 2020-2021 மற்றும் 2021-2022 ஆகிய வருடங்களில் ஏற்பட காரணமாக இருந்துள்ளது.

கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான தினசரிச் சந்தை அமைப்பதற்கு நகர்மன்றத்தில் முதல் தீர்மானமாக வைக்கப்பட்ட 1 முதல் 47 வரையுள்ள தீர்மானங்களை யாரிடமும் அனுமதி பெறாமல் நகராட்சி தனி அலுவலர் தனது அதிகாரத்தினை தவறாகவும் முறைகேடாகவும் அரசுவிதிகளுக்கு முரணாகவும், தன்னிச்சையாக இரத்து செய்தது ஏற்புடையதல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கோவில்பட்டி நகராட்சி தினசரிச் சந்தை தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் மிகவும் குறைந்த நாள் வாடகை 01.04.1970 முதல் 30.09.2017 வரை தினசரிச் சந்தை கடை வாடகைதாரர்கள் செலுத்தி வந்த நிலையில், கோவில்பட்டி நகராட்சியின் வருவாய் உயர்த்தும் மூலமாக அரசு வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி வாடகை நிர்ணயம் செய்துள்ளதை தினசரிச் சந்தை வியாபாரிகளின் ஆட்சேபனையினை ஏற்றுக்கொண்ட கோவில்பட்டி நகராட்சி நிர்வாகம் வியாபாரிகள் நலனுக்காக கோவில்பட்டி நகராட்சிக்கு வருவாய் இழப்பை கருத்தில் கொள்ளாமல் ஒருதலைபட்சமாக குத்தகை இனத்தினை ஏலம் விடாமலும் தொடர் நடவடிக்கை எடுக்காமலும் கோவில்பட்டி நகராட்சிக்கு நிதி இழப்பிற்கு காரணமாக செயல்பட்ட ஆணையாளர், வருவாய் அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் பிரிவு எழுத்தர் ஆகியோருக்கு முறைப்படி நடவடிக்கை எடுத்து தண்டிக்கும்படியும் மற்றும் மேற்படி தினசரி சந்தை நுழைவுக்கட்டணம் பொருள் 1 முதல் 47 வரையிலான ஏலத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த உரிய ஆணை பிறப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

8. இந்நேர்வில் எதிர் மனுதாரர்களான கோவில்பட்டி நகராட்சியின் ஆணையாளர் மற்றும் இந்நகராட்சியின் முன்னாள் வருவாய் அலுவலர் ஆகியோர் முறைமன்ற நடுவத்தில் 28.09.2021 அன்று நடந்த விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்காணுமாறு கூட்டு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் தினசரிச் சந்தையில் கடை வாடகை நீங்கலாக நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 17.02.2015ம் தேதியன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திரு.கே.கணபதி பாண்டியன் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளியாக ரூ.38,10,001/- கோரியுள்ளதை நகர்மன்ற தீர்மானம் எண்.1460, நாள்.09.03.2015-ன் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (குத்தகைத் தொகை 01.04.2011 -31.03.2012-ம் ஆண்டிற்கான குத்தகைத் தொகை ரூ.32,42,276/-, 01.04.2012-31.03.2013 ம் ஆண்டிற்கான குத்தகைத் தொகை ரூ.32,52,222/- 01.04.2013 முதல் 31.03.2014 ஆம் ஆண்டிற்கான ரூ34,14,833/-, 01.04.2014 முதல் 31.03.2015 வரையிலான ஆண்டிற்கு ரூ.35,85,574/-ம் 01.04.2015 முதல் 31.03.2016 வரையிலான முதலாம் ஆண்டிற்கு ரூ.38,10,001/-ம், 01.04.2016 முதல் 31.03.2017 வரை இரண்டாம் ஆண்டிற்கு ரூ.40,00,501/-ம் மற்றும் 01.04.2017 முதல் 31.03.2018 வரை மூன்றாம் ஆண்டிற்கு ரூ.42,00,526/-ம் குத்தகைதாரரான திரு.கே.கணபதி பாண்டியன் என்பவரிடமிருந்து கோவில்பட்டி நகராட்சியால் வசூல் செய்யப்பட்டது. மேற்கண்ட குத்தகை, 31.03.2018 தேதியுடன் முடிவுற்றது.

மேற்கண்ட குத்தகை தொடர்பாக திரு.பால்ராஜ் என்பவரால் வழக்கு தொடரப்பட்டு (WP (MD) No.17617/2018 and WMP (MD) Nos.17410, 16797, 16795 & 15491, 15492 of 2018 நாள்.23.04.2019 படி வழக்குகள் முடிந்த பின்னர், மேற்கண்ட சந்தைக்கான குத்தகை தொடர்பாக 19.11.2019ல் ஏலம் விடப்பட்டு திரு.எஸ்.பால்ராஜ் என்பவரால் ரூ.60 லட்சத்திற்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட சந்தை தொடர்பாக குத்தகை விடப்பட்டதில் நகராட்சிக்கு இழப்பு ஏதும் ஏற்படவில்லை என தெரிவித்துக் கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான 24.09.2021 நாளிட்ட நகராட்சி ஆணையரின் அறிக்கையினை இம்மன்றத்தின் முன் சமர்பிக்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

9. முறைமன்ற நடுவ அழைப்பாணை முறையீட்டு மனு எண்.140/ந/2019 நாள்.10.09.2019ல் முறையீட்டு மனுதாரரின் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு கோவில்பட்டி நகராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார். கோவில்பட்டி நகராட்சி ஆணையர் தனது கடித எண். ந.க.எண்.9856/2014/அ3 நாள்.24.09.2019 மற்றும் கடிதம் ந.க.எண்.3149/2021/அ3 நாள்.24.09.2021-ல் அவருடைய அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். ஆணையர் தன்னுடைய 24.09.2019 நாளிட்ட அறிக்கையில்

- கோவில்பட்டி நகராட்சி தினசரிச் சந்தை வியாபாரிகள் சங்கம், செயலாளர் திரு.எம்.டி.எம்.ரவீந்திரராஜன் அவர்களுக்காக தினசரி சந்தை வாகன நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு உரிய வைப்பு தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகை செலுத்தி உள்ளார். மேலும் அன்னார் தனது தனி நபர் தேவைக்காக குத்தகை உரிமம் கோரவில்லை. கோவில்பட்டி வட்டார வியாபாரிகள் மற்றும் காய்கறி உற்பத்தியாளர்கள் நல சங்கம் சார்பாக செயலாளர் என்ற நிலையில் சங்கத்திற்காக ஏலம் கோரியுள்ளார். எனவே பத்தி எண்.01 ல் சுட்டி காட்டப்பட்டுள்ள ஏல நிபந்தனை அன்னாருக்கு பொருந்தாது என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

- திரு.பால்ராஜ் என்பவர் 31.07.2018 ல் நடைபெற்ற பொது ஏல ஒப்பந்தப்புள்ளியின் போது ரூ.36,36,000/- க்கு உயர்ந்தபட்ச ஏல கேள்வி கோரியுள்ளார். மேற்படி ஏல தொகை செயலாளர் திரு.எம்.டி.எம்.ரவீந்திரராஜன் ஏல விதிகளின் படி மறு ஏலம் கோருவதற்கு ஏல தொகையிலிருந்து 25 சதவீதம் கூடுதல் ரூ.9,09,000/- – மற்றும்

முன்பு 31.07.2018-ல் ஏல கேள்வி தொகை ரூ.36,36,000/– – சேர்த்து ரூ.45,45,000/- – அரசு மதிப்பை காட்டிலும் கூடுதலாக ரூ.1000/- – சேர்த்து ரூ.45,46,000/- – ஏலம் கோரி செலுத்து சீட்டு எண்.1627 நாள்.24.05.2019ன்படி ஏல தொகை செலுத்தி உள்ளார். இந்நிகழ்வில் எவ்வித விதி மீறல்களும் இல்லை. குத்தகை விதிகளின் படியே ஏலம் நடைபெற்று உள்ளது என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

- ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி ஒருவர் கோரிய உயர்ந்த பட்ச ஏல கேள்வியை 24 மணி நேரத்திற்குள் மறு ஏலம் கோர சவால் (chellange) செய்யலாம். அதற்கான ஏல விதி முறைகளின் படியே ஏலம் ஆணையாளர் அவர்களால் நடத்தப்பட்டது. இதில் எவ்வித தவறும் நிகழவில்லை என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

- மாண்புமிகு நீதியரசர் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை அவர்களின் WMP (MD) No. 1767 of 2018 தீர்ப்பாணையின்படியே முறையாக விதிமுறைப்படி குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை மற்றும் ஏல விதிகளின் வழிகாட்டுதல் படியே முந்தைய ஏல (31.07.18) தொகையுடன் சவால் (chellange) தொகை 25 சதவீதம் கூடுதல் தொகை சேர்த்து ஏலம் விடப்பட்டு உள்ளது. நகராட்சியின் வரி வருவாயை பெருக்குவதற்காக நிர்வாக நலன் கருதியே விதிமுறைகளின்படியே மேற்படி ஏல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் எவ்வித விதி மீறலும் இல்லை என பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

10. மேலும் ஆணையர் தன்னுடைய 24.09.2021 நாளிட்ட அறிக்கையில் கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் தினசரிச் சந்தையில் கடைவாடகை நீங்கலாக நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 17.02.2015ம் தேதியன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றுள்ளது. மேற்கண்டவாறு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு.கே.கணபதி பாண்டியன் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.38,10,001/- கோரியுள்ளதை இந்நகர்மன்ற தீர்மானம் எண். 1460, நாள்.09.03.2015-ல் மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. மேற்காணும் விபரப்படி மன்றம் அனுமதி வழங்கியதை தொடர்ந்து 01.04.2015ம் தேதி முதல் 31.03.2016 வரை முதலாமாண்டிற்கு குத்தகை தொகை ரூ.38,10,001/-ம், 01.04.2016 முதல் 31.03.2017 வரை இரண்டாம் ஆண்டிற்கு குத்தகை தொகை ரூ.40,00,501/-ம், 01.04.2017 முதல் 31.03.2018 வரை மூன்றாம் ஆண்டிற்கு குத்தகை தொகை ரூ.42,00,526/-ம் திரு.K.கணபதி பாண்டியன் என்ற குத்தகைதாரரிடமிருந்து வசூல் செய்யப்பட்டு மூன்றாண்டுகளுக்கு குத்தகை ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்காணும் ஆண்டு குத்தகை 31.03.2018 ஆம் தேதியுடன் முடிவடைந்தது.

கோவில்பட்டி நகராட்சி தினசரி சந்தை வியாபாரிகள் சங்கம் நிர்வாகிகளால் தினசரிச் சந்தையில் விற்பனைக்கு வரும் சரக்குகளுக்கு மட்டும் நுழைவு கட்டணம் வசூலிப்பதை நீக்குவதற்காக 07.02.2018 ஆம் தேதியன்று விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் விண்ணப்பம் வரப்பெற்ற நிலையில் 13.02.2018-ல் நடைபெறுவதாக இருந்த பொது ஏலம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. மேற்காணும் விண்ணப்பத்தின்படி 16.02.2018-ம் தேதியன்று தினசரி சந்தை குத்தகைதாரர்கள், சங்க பிரதிநிதிகள் மற்றும் வியாபாரிகளுடன்

ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு பின்பு வருவாய் ஆய்வாளர் தினசரி சந்தையில் வரும் வாகனங்களுக்கு மட்டும் நுழைவு கட்டணம் வாடகை நிர்ணயம் செய்து, வசூல் செய்ய 23.02.2018ல் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இந்நிலையில் கோவில்பட்டி நகர்மன்ற தீர்மான எண்.3033, நாள்.28.03.2018ல் ஏற்கனவே நடைமுறையில் உள்ள தினசரி சந்தை நுழைவுக் கட்டணம் குத்தகை உரிமத்தில் உள்ள பொருட்களுக்கு நுழைவு கட்டணம் வழங்க மறுப்பு தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் வருவாய் ஆய்வாளர் அறிக்கையின்படி, வாகனங்களுக்கு மட்டும் கட்டணம் நிர்ணயம் செய்து, நுழைவுக் கட்டணம் வசூல் செய்வதற்கு மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அதனை தொடர்ந்து 01.04.2018 முதல் 31.03.2019 வரை தினசரிச் சந்தையில் வரும் வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணம் துறை மூலம் வசூல் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பொருள் தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட அரசிதழில் 06.08.2018 ல் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

தினசரி சந்தையில் வாகன நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை 31.07.2018-ல் நடைபெற்றுள்ளது. மேற்காணும் 31.07.2018-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு.M.T.M. ரவீந்தராஜன் என்பவர் ரூ.35,01,000/-ற்கும், திரு.எஸ்.பால்ராஜ் என்பவர் ரூ.36,36,000/-ற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்கள். இந்நிலையில் திரு.எஸ்.பால்ராஜ் என்பவர் கோரிய ரூ.36,36,000/- ற்கான தொகையினை திரு.M.T.M. ரவீந்தராஜன் என்பவர் சேலன்ஞ் செய்து மேற்காணும் தொகையினை விட கால்பங்கு கூடுதலாக செலுத்தி மறு ஏலம் நடத்துவதற்கு கடிதம் சமர்ப்பித்துள்ளார். அதன் அடிப்படையில் குறுகியகால பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 09.08.2018ல் திரு.M.T.M.ரவீந்தராஜன் என்பவரால் ரூ.45,46,000/- ற்கு பொது ஏலம் கோரியுள்ளார். இந்நிலையில் திரு.எஸ்.பால்ராஜ் என்பவர் மாண்புமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WMP (MD) No.15492/2018 ல் WP (MD) No. 16617/18ல் தடையாணை பெற்றிருப்பதாக கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேற்படியார் சமர்ப்பித்த கடிதத்தின்படி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டது. மேற்காணும் திரு.M.T.M. ரவீந்தராஜன் என்பவர் 09.08.2018 ல் கோரிய உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.45,46,000/-ஐ மாண்புமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு W.P. (MD) No. 17617/2018 & W.M.P (MD) Nos. 17410, 16797, 16795 & 15491, 15492 of 2018 நாள்.23.04.2019 ன் தீர்ப்பாணையில் அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி 01.06.2019 முதல் 31.05.2020 வரை முதலாம் ஆண்டு குத்தகை அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் திரு.எஸ்.பால்ரராஜ் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு W.P. (MD) Nos. 16925 & 16927 of 2019 ன்படி தினசரிச் சந்தை வாகன நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு மீண்டும் பொது ஏலம் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 19.11.2019 ம் தேதியன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மேற்கொள்ளப்பட்டது. மேற்காணும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திரு.M.T.M. ரவீந்தராஜன் என்பவர் ரூ.45,47,000/-ற்கு ஒப்பந்தப்புள்ளியும் திரு.எஸ்.பால்ராஜ் என்பவர் ரூ.60,00,000/-ற்கும் பொது ஏலம் கோரப்பட்டுள்ளது. இதில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ.60,00,000/- கோரிய திரு.எஸ்.பால்ராஜ் என்பவருக்கு 01.12.2019 முதல் குத்தகை ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் தினசரிச் சந்தை வாகன நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் தொடர்பாக இந்நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதுமில்லை என தெரிவித்துள்ளார்.

11. இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர்கள் திரு.K.கணபதி பாண்டியன் மற்றும் திரு.மா.முருகன் ஆகியோரின் வாக்குமூலங்கள், எதிர் மனுதாரர்களான கோவில்பட்டி நகராட்சியின் தற்போதைய ஆணையர் மற்றும் முன்னாள் வருவாய் அலுவலர் இணைந்து சமர்ப்பித்த வாக்குமூலம் மற்றும் கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வில் ஆணையர் அளித்த அறிக்கை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் கோவில்பட்டி நகராட்சியில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவர் தினசரிச் சந்தையில் 2018-2019 ஆம் ஆண்டிற்கான நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கீழ்க்காணும் காரணங்களால் குறிப்பிட்ட காலத்தில் நடைபெறவில்லை என்று தெரிகிறது:-

- தினசரி சந்தை வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்ய கோரிக்கை விடுத்ததை தொடர்ந்து 13.02.2018 நடக்கவிருந்த ஏலம் / ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டுள்ளது.

- இதனை தொடர்ந்து நகராட்சியில் ஏலம் விடப்பட்ட போது இரு ஒப்பந்ததாரர்களுக்குள் ஏலம் எடுப்பதில் நிலவிய போட்டியின் காரணமாகவும் ஏலம் எடுப்பதற்காக அவர்கள் நீதிமன்றத்தில் பெறப்பட்ட ஆணைகள் மூலமாகவும் 2018-2019ல் அடுத்தடுத்து இருவருக்கும் குத்தகை உரிமம் வழங்கப்பட்டு ரத்து செய்யப்பட்டும் ஏலம் ஒத்திவைக்கப்பட்டு வந்துள்ளது தெரிகிறது. இறுதியாக திரு.சு.பால்ராஜ் உயர்ந்த ஏலம் தொகை ரூ.60 லட்சம் செலுத்தியதால் அவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. எனவே 2018-2019 ஆம் ஆண்டு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்ட காலத்தில் நகராட்சி நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டும், மேற்கூறிய காரணங்களால் ஒத்தி போடப்பட்டு வந்தது தெளிவாகிறது.

13. மேற்காணும் சூழ்நிலையில் ஆணையரின் அறிக்கையை ஏற்று முறையீட்டு மனுதாரரின் மனு மீதான மேல்நடவடிக்கையை கைவிட இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 03 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. K. கணபதிபாண்டியன்,
1/14, கீழத்தெரு, வெள்ளாளங்கோட்டை,
கயத்தார் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.

2) திரு.மா.முருகன்,
6/779, அண்ணா நகர்,
லிங்கம்பட்டி – 628 502,
கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மவாட்டம்.

3) நகராட்சி ஆணையர்,
கோவில்பட்டி நகராட்சி,
கோவில்பட்டி, தூத்துக்குடி மவாட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

நகல்:

முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்
உதவி பதிவாளர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.